புதுமலர்: 21 இதழ்: 06 கார்த்திகை - மார்கழி

**65 ஆண்டுகளை நிறைவு செய்யும்
சீயோன் தேவாலயத்திற்கு
எமது வாழ்த்துக்கள்.... 01.11.2024**

ஆசிரியர்:
போதகர் வே. மகாராஜா

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் சாட்சி வாழ்வு!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 122
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. வினா விடை - 124
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. பக்தர்கள் பயிலகம்
12. தேவன் தந்த வைரங்கள்
13. அவர்கள் கெட்ட பிள்ளைகள்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.




T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

தேவனுக்கு மகிமையுண்டாகட்டும். 2024ஆம் ஆண்டு தேவன் தம் கிருபையினாலே எம்மைக் காத்து, ஆசீர்வதித்து, பெலப்படுத்தினார். அத்துடன் அனல் சஞ்சிகை இவ் வருடம் முழுவதும் தடையின்றி வெளிவர கர்த்தர் தயை புரிந்தார். இதன் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

தொடர்ந்தும் வரப்போகும் புதிய வருடத்திற்குள் தேவனை நம்பிக் கடந்து செல்லுங்கள். கர்த்தர் தம்மை நம்பிய ஒருவரையும் கைவிடமாட்டார். சூழ்நிலைகளைப் பார்க்காதீர்கள்; கர்த்தரைப் பாருங்கள். தேவ சித்தமில்லாமல் வருகின்ற நிறைந்த ஆசீர்வாதங்களை அனுபவிப்பதை பார்க்கிலும் தேவன் உங்கள் வாழ்வில் வைத்த அவருடைய சித்தத்தின் படியான கொஞ்சத்தில் சந்தோஷமாக இருங்கள்.

உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். இவ் வருடம் தேவன் வேதனைப்படும்விதமாய் அவரை உதாசீனப்படுத்தி செயலாற்றியிருந்தால் மறுபடி அவரின் நடத்துதலுக்குள் வரும்படி மனந்திரும்புங்கள்.

இவ் வருடத்தின் இக் கடைசி சஞ்சிகை வெளிவர கிருபை செய்த தேவன் புதிய ஆண்டிற்குள் அனல் காலடி எடுத்து வைக்க உதவி செய்வாராக.

மேலும் இவ் வருடம் அறுபத்தைந்து வருடங்களை நிறைவு செய்யும் சீயோன் தேவாலயம் தொடர்ந்தும் தேவபணி செய்ய அனலின் வாழ்த்துக்கள்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றலும்

## கண் முன்னே தெரியும் பிழைகளை சீர்படுத்துவோம்

❑ வை. விமலதாஸ்

படகு ஒன்றுக்கு பெயின்ட் அடிப்பதற்கான பொறுப்பு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர் ப்ரஷ், பெயின்ட் என்பவற்றைக் கொண்டு வந்து படகு உரிமையாளர் வேண்டிக் கொண்டதைப் போலவே பிரகாசமான சிவப்பு நிறத்தில் பெயின்ட் அடித்துக் கொடுத்தார்.

பெயின்ட் அடித்துக் கொண்டிருக்கும் போது அந்தப் படகில் ஒரு சிறிய ஓட்டை இருப்பதை அவதானித்து, உடனடியாகவே அந்த ஓட்டையை சரிவர அடைத்தும் விட்டார்.

வேலை முடிந்ததும் அவர் தனக்குரிய கூலியை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்.

அடுத்த நாள் படகின் உரிமையாளர் அந்த பெயின்டரின் வீடு தேடி வந்து ஒரு பெறுமதிமிக்க காசோலையை கொடுத்தார். அது அவர் ஏற்கனவே கூலியாக வழங்கிய தொகையைப் பார்க்கிலும் பன் மடங்கு அதிகமானது.

பெயின்டருக்கோ அதிர்ச்சி. 'நீங்கள் தான் ஏற்கனவே பேசிய கூலியைத் தந்துவிட்டீர்களே? எதற்காக மீண்டும் இவ்வளவு பணம் தருகிறீர்கள்?' என்று கேட்டார் பெயின்டர். 'இல்லை. இது பெயின்ட் அடித்ததற்கான கூலி அல்ல. படகில் இருந்த ஓட்டையை அடைத்ததற்கான பரிசு' என்றார் படகின் உரிமையாளர்.

'இல்லை ஐயா... அது ஒரு சிறிய வேலை. அதற்காக இவ்வளவு பெரிய தொகைப் பணத்தை தருவதெல்லாம் நியாயமாகாது. தயவு செய்து காசோலையை கொண்டு செல்லுங்கள்' என்றார் பெயின்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நண்பரே… உங்களுக்கு விடயம் புரியவில்லை. நடந்த விடயத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்' என்று சொல்லி விட்டு படகு உரிமையாளர் தொடர்ந்தார்.

'நான் உங்களை படகுக்கு பெயின்ட் அடிக்கச் சொல்லும் போது அதில் இருந்த ஓட்டை பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். பெயின்ட் அடித்துவிட்டு நீங்களும் போய்விட்டீர்கள். அது காய்ந்த பிறகு எனது பிள்ளைகள் படகை எடுத்துக் கொண்டு மீன் பிடிக்கக் கிளம்பிவிட்டார்கள். படகில் ஓட்டை இருந்த விடயம் அவர்களுக்குத் தெரியாது. நான் அந்த நேரத்தில் அங்கு இருக்கவுமில்லை.

நான் வந்து பார்த்த போது படகைக் காணவில்லை. படகில் ஓட்டை இருந்த விடயம் அப்போதுதான் நினைவுக்கு வர நான் பதறிப் போய்விட்டேன். கரையை நோக்கி ஓடினேன். ஆனால் எனது பிள்ளைகளோ மீன் பிடித்து விட்டு மகிழ்ச்சியாக திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கணம் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் அளவேயில்லை.

உடனே படகில் ஏறி ஓட்டையைப் பார்த்தேன். அது நேர்த்தியாக அடைக்கப்பட்டிருந்தது. இப்போது சொல்லுங்கள். நீங்கள் செய்தது பெறுமதியற்ற சிறியதொரு வேலையா? நீங்கள் என்னுடைய பிள்ளைகளின் விலைமதிக்க முடியாத உயிர்களையல்லவா காப்பாற்றியிருக்கிறீர்கள்? உங்களது இந்தச் "சிறிய" நற்செயலுக்காக நான் எவ்வளவுதான் பணம் தந்தாலும் ஈடாகாது.' என்றார்.

நண்பர்களே… இந்த வருடத்தின் இறுதிப்பகுதிக்குள் வந்திருக்கின்றோம். இந் நேரத்தில் இக் கதையிலிருந்து என்ன புரிகிறது.

யாருக்கு எங்கே எப்போது எப்படி என்றெல்லாம் பார்க்க வேண்டிய தில்லை. நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிரதிபலன் பாராது உதவுவோம். பிறரின் கண்ணீரைத் துடைப்போம். நம் கண் முன்னே தெரியும் ஓட்டைகளை கவனமாக அடைப்போம். அப்போதுதான் நமது ஓட்டைகளை அடைப்பதற்கான மனிதர்களை தேவன் அறியாப் புறத்திலிருந்து நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பார்.

**மத்தேயு 6:12 எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.**

அன்பின் அனல் வாசகர்களுக்கு!
இவ் வருடம் முழுவதும் தடையின்றி சஞ்சிகை வெளிவர உதவி செய்த தேவனுக்கு மகிமை உண்டாகட்டும். அடுத்த ஆண்டிலும் உங்கள் சஞ்சிகைகளை தடையின்றி பெற்றுக் கொள்வதற்கு உங்கள் சந்தாக்களை இப்பொழுதே புதுப்பித்துக் கொள்ளுங்கள். ஏனையோருக்கும் அறிமுகம் செய்து வையுங்கள்.
- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தள்ளிவிடாத தகப்பன்

❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்!

தேவ கிருபையினாலே ஒரு ஆண்டை முடிக்கப்போகின்றோம். தீமைகள் எம்மை சூழ்ந்து நின்றாலும் கர்த்தர் நமக்கு அடைக்கலமாக இருந்து இவ் ஆண்டின் இறுதி வரையும் நம்மை நடத்தி வந்தார். அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாகட்டும்.

**யோவான் 6:37b என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி. இயேசு சொன்னார்: 'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை' என்பதாக. ஆம் அவர் தம்மிடத்தில் வருகிறவர்களை ஏற்றுக் கொள்கின்றவர். சாதாரண சிறியவர்களை கூட... வயதில் அல்ல; வாழ்க்கையின் தரத்தில். சமுதாயத்தில, பாவத்தின் கொடூரத்தில், பொருளாதாரத்தில், சமூக அந்தஸ்த்தில், அறிவில், அழகில், ஆரோக்கியத்தில்... இப்படி எதில் கேவலமாக இருந்தாலும் நாம் இயேசுவிடம் வரும் போது இயேசு நம்மை அப்படியே ஏற்றுக்கொள்கின்றவர்.

தள்ளிவிடும் பல மனிதர்களை நாம் பார்த்திருக்கிறோம். கணவன் - மனைவியை தள்ளிவிடுகின்றார், மனைவியும் - கணவனை தள்ளிவிடுகிறார், பெற்றோர் - பிள்ளைகளை; பிள்ளைகள் - பெற்றோரைத் தள்ளிவிடுகின்றார்கள். சமுதாயத்தில், அயலில் சிலரை மனதளவில் தள்ளி வைக்கின்றோம்.

சபையில் ஊழியர்களை — விசுவாசிகளும்; விசுவாசிகளை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களும் தள்ளி வைக்கிறோம். கூடவே சகோதரர்களுக்குள்ளே சகோதரரை தள்ளி விடுகின்றோம்.

தள்ளிவிடும் கூட்டம் யாரென்றால் தேவபக்தியைப் போல தங்களை காண்பிக்கும் கூட்டத்தாரே அவர்கள் பரிசேயர். மோசேயின் சீஷர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுகிறவர்களுமே. **யோவான் 9:27-38.**

நாம் கிறிஸ்துவை விட்டு விலகி அவரை தள்ளிவிட்டாலேயன்றி மற்றப்படி தேவன் ஒரு போதும் எம்மை தள்ளி விடவேமாட்டார். அவர் எங்கள் ஒவ்வொருவரின் மேலும் இவ்வளவாய் அன்பு கூர்ந்தாரல்லவா?

**லூக்கா 23:42 இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.**

இங்கே இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களைக் குறித்துப் பார்க்கலாம். ஒருவன் இயேசுவை இகழ்ந்தான்.

**லூக்கா 23:39 அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.**

மற்றவன் தன்னை உணர்ந்தான்.

**லூக்கா 23:41 நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,**

'நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகின்றோம்'

ஆம் பிரியமானவர்களே, இந்த கள்வன் தன்னுடைய தவறை, பாவத்தை உணர்கின்றான். இயேசுவை பார்த்து சொல்கின்றான்: 'ஆண்டவரே' நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும். இயேசு சொன்னார்: 'இன்றைக்கு நீ என்னோடே கூட பாதீசிலிருப்பாய்'.

கொலைக்கு ஏதுவான கள்வன் தான். ஆனால் தன் பாவத்தை உணரும் போது மன்னிக்கும் வள்ளல் நம் ஆண்டவர் அவனைத் தள்ளவில்லை. உணர்ந்தவனை ஏற்றுக் கொண்டார்.

அன்பான சகோதரனே, சகோதரியே நீங்களும் இருக்கும் இடத்தில் உங்களுடைய பாவத்தை உணர்ந்து எனக்கு ஏற்பட்ட தீமைகள் யாவும் நியாயமானவைகள் தான் என்பதை ஏற்றுக்கொண்டு இயேசுவை நோக்கிக் கூப்பிட்டால் இயேசு இப்பொழுதே உங்களுக்கு உதவி செய்வார். சாகப்போகும் கடைசி நிமிட நேரத்தில் வந்துவிட்டான் என்று சொல்லி தள்ளிவிடமாட்டார். அற்பமாக அல்லது பாரமாக பார்க்கமாட்டார். அது தான் இயேசு கிறிஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூக்கா 18:13 ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.**

இங்கே இரண்டு பேர் ஜெபம் பண்ணுகிறார்கள். ஒருவன் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை, நன்மதிப்பை பெற்ற பரிசேயன். இன்னொருவன் இழிவாக பார்க்கப்பட்ட அற்பமான மனிதனாகிய ஆயக்காரன்.

இந்த ஆயக்காரனுடைய ஜெபத்தையே நாம் மேல் வசனத்தில் பார்த்தோம்.

ஆம் இந்த ஆயக்காரன் தன்னை ஓர் பாவி என்று உணர்ந்தான். நான் தகுதியற்றவன் என்பதனை உணர்ந்தான். தேவனிடத்தில் கிருபைக்காக கெஞ்சினான். அதனால் 'வீடு போகும் போது நீதிமானாக்கப்பட்டவனாக சென்றான்'.

நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் பல குறைவுகளோடு, தகுதியற்ற தன்மைகளோடு, மற்றவர்கள் பாவத்திற்கு உதாரணம் சொல்லும் மனிதனாகக்கூட இருக்கலாம். ஆலயத்திலும் அறியப்படாதவர்களாக காணப்படலாம். ஆனால் இயேசுவினிடத்தில் உண்மையாக உங்கள் உள்ளத்தை உடைத்து அவர் கிருபைக்காக கெஞ்சுவீர்களானால் தேவன் உங்கள் இருதயத்தை பார்த்து உங்கள் வாழ்வில் அற்புதம் செய்வார். அவர் உங்களை ஒரு போதும் தள்ளவே மாட்டார். ஏனென்றால் அவர் உங்களைத் தான் அதிகமாக நேசிக்கின்றார். எவன் அதிகமாக மன்னிக்கப்பட்டானோ அவனே அதிகமாக அன்பு கூருவான் என்று இயேசுவுக்குத் தெரியும்.

**லூக்கா 15:19 இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி..**

இங்கே இளையகுமாரன் பின் மாற்றமாக சென்றவன் தான். சகல கெட்ட குணங்களையும் பழகிவிட்டான். சொத்தையும் சரீரத்தையும் அழித்து விட்டு நிற்கின்றான். பஞ்சம் உணர்வைக் கொண்டு வந்த போது மனந்திரும்புகின்றான். வீடு நோக்கி நடக்கின்றான்; தகப்பன் ஏற்றுக்கொள்கின்றார். ஆனால் அண்ணன் ஏற்க மறுக்கின்றான்.

இங்கே தகப்பன் நம் பரம பிதாவாகிய ஆண்டவர். நாம் எம்முடைய அக்கிரமங்களை, குற்றங்களை உணர்ந்து உடைந்து வரும் போது அன்பு தகப்பனாகிய இயேசு எம்மை அப்படியே ஏற்றுக்கொள்கின்றார், கட்டி அணைக்கின்றார், முத்தமிடுகிறார்.

**லூக்கா 15:29 அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து,...**

இளையகுமாரனை ஏற்க மறுத்தது யார்? எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாக தகப்பனுக்கு ஊழியஞ் செய்தவனே. ஆம் பிரியமானவர்களே நீங்கள் மனந்திரும்புவதை நீண்ட காலமாக இரட்சிக்கப்பட்டு விசுவாசி யாக இருக்கிறவர்கள் அல்லது ஊழி யம் செய்கிறவர்கள் ஏற்றுக்கொள்ளா மல் இருக்கலாம், அற்பமாக எண்ண லாம், கேவலமாக பேசலாம்.

**லூக்கா 15:30 வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்.**

அதனாலே நீங்கள் சோர்ந்து போகவேண்டாம், துவள வேண்டாம். மனிதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே என மறுபடியும் பின்மாற்றத்திற்குள்ளே போக நினைக்க வேண்டாம். உங்களை மன்னிக்கிறவர் ஒருவர். உங்களை ஏற்றுக்கொள்கிறவர் ஒருவர். உங்களை வாழ வைக்கிறவரும் ஒருவரே. அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. ஆகவே உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள்.

அவர் உங்களை ஒரு போதும் தள்ளமாட்டார்.

இளைய குமாரனை ஏற்றுக் கொண்டார்.

ஆயக்காரனை ஏற்றுக் கொண்டார்.

சிலுவையில் தொங்கிய கள்வனை ஏற்றுக்கொண்டார்.

அவர்மனந்திரும்பும்உங்களை யும் ஏற்றுக்கொள்ளுவார். பயப்படாதீர் கள். நம்பிக்கையோடு உங்களுடைய வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுங்கள்.

## வினாவிடை 122
### சரியான பதில்கள்

01. பூமியை பிளந்து - ஆபகூக் 3:9
02. யோவாஸ் - 11இராஜாக்கள் 13:14
03. தானியேல் - தானியேல் 12:6
04. தேவன் - ஆதியாகமம் 3:21
05. எலியா - 1இராஜாக்கள் 19:9
06. பவுல் - அப்போஸ்தலர் 17:18
07. சாராள், ஆபிரகாம், ஈசாக்கு, ரெபெக்காள், லேயாள், யாக்கோபு - ஆதியாகமம் 23:19, 25:9, 49:31, 50:1
08. அகீஷார் - 1இராஜாக்கள் 4:6
09. யோயாக்கீம் - பாரூக் எழுதினான் - எரேமியா 36:22-29
10. அஞ்சனக்காரி - 1சாமுவேல் 28:13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ ஜசிந்தா அக்கா




எப்பொழுதும் இயேசுவிற்கு நன்றி! ஸ்தோத்திரம்! என்று சொல்லும் ஏழ்மையான ஒரு அம்மா இருந்தார். வேதப்புத்தகத்தை வாசிக்கும் பொழுது தன்னோடு பேசும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் நன்றி இயேசப்பா என்று சொல்லி மகிழ்ச்சியினால் பொங்கி ஆர்ப்பரிப்பார். தான் விரும்பிய பொருள் அவளது கரத்தில் கிடைத்தால் அவற்றைக் கையில் எடுத்து கரங்களை விரித்து வானத்தைப் பார்த்து கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம்... என்று கூறுவார்.

ஆலயத்திற்குச் செல்லும் பொழுதும் ஆண்டவரே ஸ்தோத்திரம்.. நன்றி.. அல்லேலூயா... என்று சொல்லிக் கொண்டே ஆலயத்திற்குள் பிரவேசிப்பார். ஆராதனை நேரத்தில் அவளது உள்ளம் தேவ அன்பினாலும் ஸ்தோத்திரங் களினாலும் நிறைந்திருந்தது.

தேவ செய்தி கொடுக்கும் நேரத்தில் தேவன் தன்னோடு பேசும் ஒவ்வொரு வார்த்தையின் நிமித்தம் மிகவும் மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஸ்தோத்திரம்... அல்லே...லூ...யா என்று சத்தமாய் சொல்வாள். அவ்வேளையில் போதகர் செய்தியை நிறுத்தி அம்மாவின் ஸ்தோத்திரம் முடியும்வரை பொறுமையாய் காத்திருப்பார். மறுபடியும் செய்தியில் தேவன் பேசும் போது வழமைபோல் தேவனைத் துதித்து மகிமைப்படுத்துவாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லாத ஒவ்வொருவருக்கும் அம்மாவின் ஸ்தோத்திர சத்தம் சங்கடமாகவும் இடையூறாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் கூடி அம்மாவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று ஆலோசித்தனர். அவளது வீட்டிற்குச் சென்றனர். அவளோடு அன்பாய் பேசி ஆலோசனை கூறினர். பின் உங்களுக்கு என்ன தேவை இருக்கிறது என்று விசாரித்தனர். எனது பாதணிகள் பழுதடைந்துவிட்டன. எனக்குப் பாதணிகள் தேவை என்றாள். ஊழியர் ஒருவர் புதிய பாதணிகளை வாங்கிக் கொடுத்த பின் அம்மா... உங்களிடத்திலும் நாம் தயவாய் ஒன்றைக் கேட்கிறோம் ஆராதனை நேரத்தில் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சத்தம் போடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். அது எப்படி? என்று மனதிற்குள் சிந்தித்த வண்ணம் அரை மனதுடன் சம்மதித்தார்.

அடுத்த ஞாயிறு வந்தது. ஊழியர்கள் மிகுந்த நின்மதியோடும் சமாதானத்தோடும் ஆராதனையை நடத்தினார். தேவ செய்தி நேரத்தில் தேவன் அம்மாவின் உள்ளத்தில் பேசும் நல்ல வார்த்தைகளைக் கேட்டு தன்னைக் கட்டுப்படுத்தமுடியாமல் எழுந்து நின்று தன் கரங்களில் பாதணிகளை எடுத்து உயர்த்திப் பிடித்து பாதணிகள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அல்லே...லூ...யா என்று சத்தமிட்டாள்.

இயேசப்பாவின் அன்பான பிள்ளைகளே உங்கள் இருதயம் எதனால் நிறைந்திருக்கிறது?

**சங்கீதம் 34:1 கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.**

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 121

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. பாகால்பிராசீம் (11சாமுவேல் 5:20)
03. எசேக்கியா (11நாளாகமம் 32:8)
05. எலியா (1இராஜாக்கள் 19:4)
13. தானியேல் (தானியேல் 10:16)

**வலமிருந்து இடமாக**

01. மொர்தெகாய் (எஸ்தர் 5:9)
06. பெனாயா (1நாளாகமம் 11:23)
07. எலிசா (11இராஜாக்கள் 2:21)
08. பிலேயாம் (எண்ணாகமம் 23:10)
09. யேசபேல் (11இராஜாக்கள் 9:33)

**மேலிருந்து கீழாக**

03. எலெயாசார் (1நாளாகமம் 23:21)
04. யோனத்தான் (1நாளாகமம் 20:7)

**கீழிருந்து மேலாக**

03. எஸ்றா (எஸ்றா 9:6)
10. ராமதாயீம் (1சாமுவேல் 1:1)
11. அன்னவஸ்திரம் (உபாகமம் 10:18)
12. எப்பிராயீம் (ஓசியா 7:11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | □ | | | | | 02 |
| | □ | | | | | 05 | 04 | 03 |
| | | 06 | | | | □ | | |
| | | | 07 | | | □ | | |
| | | | □ | | | 08 | □ | |
| □ | | | 09 | | | | | □ |
| | 10 | □ | | | | | | 11 |
| | 12 | | | | | | | □ |
| 13 | 14 | | | | □ | | | 15 |

**இடமிருந்து வலமாக**

# குறுக்கெழுத்துப் போட்டி 122

01. ......... வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்
06. பேரீச்சமரங்களின் பட்டணத்தை பிடித்த ராஜா
07. நேகோவோடே யுத்தம் பண்ண வேஷம் மாறிச் சென்றவன்
09. எஸ்தரை தன் குமாரத்தியாக எடுத்தவன்
12. புல்லை சூரியன் உலர்த்துவது போல வாடிப்போகிறவன்
14. பெலிஸ்தரை கொன்று குவித்த இவன் தான் நம்பின ஒரு பெண்ணினால் பெலிஸ்தரோடு கூட மரித்தான்

**வலமிருந்து இடமாக**

02. ரப்சாக்கேயின் வார்த்தைகளைக் கேட்ட போது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டவன்
05. சோப்பீம் ஊரின் இன்னுமோர் பெயர்
08. கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்தவர்களில் ஒருவர்
11. பாகாத்மோவாபின் புத்திரர் இவர்களுடைய சந்ததிக்குள்ளிருந்தார்கள்
15. 'மனுஷரை பிரியப்படுத்தப் பார்க்கிறேன்?' எனக் கூறியவர்

**மேலிருந்து கீழாக**

01. கொலோசெயருக்காக பரலோகத்தில் நம்பிக்கை வைத்தவர்களில் ஒருவர்
03. உபதேசம், அறிவு போன்றவைகளில் சம்பூரணமுள்ளவர்களாகப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்படும் சபை
04. 'நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' என வாக்குத்தத்தம் பெற்றவன்
06. எமோரியர் இதை 'சேனீர்' என அழைத்தனர்

**கீழிருந்து மேலாக**


10. 'ஆசகேலின் வீட்டிலே தீக்கொழுத்துவேன்' என்று கூறியவர்
13. இவர் நஷ்டம் என்று விட்டுவிட்டு, குப்பை என்று தூக்கிப் போட்டு, இயேசுவினால் பிடிக்கப்பட்டு, இலக்கை நோக்கி ஓடினவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




□ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமுள்ள வாலிப சகோதர சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் நல்வாழ்த்துக்கள். எப்படியிருக்கிறீர்கள்? நீங்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் யாவற்றிலும் வாழ்ந்திருக் கும்படிக்கு உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.

உங்கள் கைக்கு கிடைத்திருக்கின்ற வேலைகளை முழு பலத்தோடு செய்யுங்கள். நலமான வேலையாக இருந்தால் சாட்டுப்போக்குகளை வைக்காமல் முழு பெலத் தோடு பிரயாசப்படுங்கள். நிச்சயமாக அதன் பலனைப் பெற்றுக் கொள்வீர்கள்.

குறிப்பாக படிக்கின்ற பிள்ளைகளே, உங்கள் படிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்தும்படி உங்களை தயவுடன் வேண்டுகின்றேன். தயவு செய்து படிப்பை இடைநிறுத்துவதைக் குறித்து சிந்திக்க வேண்டாம். இப்பொழுது தான் நீங்கள் கற்க வேண்டிய வயது. இந்த வயதில் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடாமல் முடிந்தளவு உங்கள் கற்றல் செயற்பாடுகளை சிறப்பாக கொண்டு நடத்துங்கள்.

அன்பான வாலிபப்பிள்ளைகளே உலகமானது தனது இறுதி நாட்களிற்குள் நகர்ந்து வந்து கொண்டிருக் கிறது. எனவே என்றுமில்லாதவாறு அசுத்த செயற்பாடு களும் பெருகிக் கொண்டே போகின்றது. மிகத் துயரமான விடயம் யாதெனில் அநேக சிறு பிள்ளைகள் இந்த துன்மார்க்கமான வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் விழிப்புடன், செயற்படவேண்டிய காலம் இதுவாகும். புத்தியுடன் நடந்து கொள்ளுங்கள்.

வாலிப வயதில் நாம் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன? எடுக்கக்கூடாத தீர்மானம் என்ன? என்பதனைக் குறித்து தொடர்ச்சியாக அனல் சஞ்சிகையின் வாலிபர் வளாகத்தில் ஆவியானவரின் உதவியோடு உங்களுக்கு எழுதி வருகின்றேன்.

அந்த வகையில் முதலாவதாக ஆதாம் – ஏவாள் தங்கள் வாழ்வில் எடுத்த பிழையான முடிவைக் குறித்து உங்களுக்கு எழுதியிருந்தேன். அதன் சுருக்கத்தை மறுபடியும் உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

தோட்டத்திலுள்ள எல்லாக் கனிகளையும் புசிப்பதற்கு அனுமதி கொடுத்த தேவன் ஆதாம் ஏவாளின் நன்மைக்காக ஜீவ விருட்சத்தின் கனியை புசிப்பதற்கு அனுமதியளிக்கவில்லை.

**'ஏவாள் தனக்கு விலக்கப்பட்ட ஒரே ஒரு மரத்தின் கனியை விரும்பு வதற்குப் பதிலாக தேவன் தனக்கு அளித்துள்ள அநேக மரங்களின் கனிகளை உண்டு திருப்தியடைந்திருக்க முடியும்'.**

ஆனால் ஏவாளோ, பிசாசின் வஞ்சக வார்த்தைகளுக்கு செவிகொடுத்து தவறான தீர்மானத்தை எடுப்பதைக் காண்கிறோம். இதில் இன்னும் நாங்கள் கவனிக்க வேண்டிய காரியம் என்னவெனில்;

ஏவாள் தன் கணவனிடம் எந்த ஆலோசனையும் கேட்காமலும், அப்படி அல்லாதுவிட்டால் தேவன் வரும்வரை பொறுமையாகக் காத்திருந்து அவரிடம் எதனையும் குறித்து விசாரித்து அறியாமல் தன் ஆசையினால் தூண்டப்பட்டு அவசர முடிவை எடுப்பதனைக் காண்கின்றோம்.

ஏவாள் பிழையான தீர்மானம் எடுத்திருப்பதனை ஆதாம் அறிந்திருந்தும் மனைவியின் தவறான விருப்பத்தினை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். தன் மனைவி தேவனைவிட்டு தூரம் சென்றுவிட்டாள் என்பதனை ஆதாம் அறிந்தும் மறு கேள்வி கேட்காமல் தன் மனைவியின் மீது வைத்திருந்த அன்பின் நிமித்தம் அவரும் பிழையான தீர்மானத்தை எடுத்தார்.

அவர்கள் எடுத்த பிழையான தீர்மானத்தின் விளைவு இன்று வரைக்கும் உலகத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுவதைக் காண்கிறோம்.

பிரியமான சகோதர, சகோதரிகளே தேவன் உங்களுக்கு தராதவைகளுக்காக சஞ்சலப்படாமல் தந்தவைகளுக்காக தேவனைத் துதியுங்கள். உலகத்தின் மாயைக்குள் சிக்கிக்கொள்ளாமல் உங்களை காத்துக் கொள்ளுங்கள். சிறிய காரியமோ, பெரிய காரியமோ முடிவு எடுப்பதற்கு முன்பு தேவ சமூகத்தில் காத்திருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக ரெகொபெயாமின் தீர்மானத்தைக் குறித்து மிக விளக்க மாகப் பார்த்தோம். ரெகொபெயாம் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை வந்த போது ஆரம்பத்தில் மிக அவதானமாகச் செயற்பட்டாலும் இறுதியில் தனது உணர்வு களைத் தூண்டத்தக்க வாலிபர்களின் பேச்சைக் கேட்டு தவறான தீர்மானத்தை எடுத்து அதனால் தனது இராஜ்யபார ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான்.

சகோதர சகோதரிகளே, இன்றைய நாட்களிலும் நிதானமான வார்த்தை களை விட நமது உணர்வுகளைத் தூண்டும் வார்த்தைகளே மிக அதிகம். ஆகவே உணர்ச்சி வசமான தவறான வார்த்தைகளிற்கு செவிகொடுக்காமல் எப்பொழுதும் நிதானத்துடன் செயற்படுங்கள்.

தவறான பாதையில் வேகமாகச் செல்வதைவிட சரியான பாதையில் மெதுவாகச் செல்லுங்கள். என ஒருவர் சொன்ன போல வேகம் என்பதனைவிட நிதானமே மிக அவசியமானதாகும்.

எனவே நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானங்களும் நன்மையோ தீமையோ அது உங்கள் வாழ்வில் எதிர்வினையாற்றும் என்பதனை உணர்ந்து கொண்டு சரியான தீர்மானங்களை எடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இந்த இதழில் இருந்து இன்னுமொரு வேதாகம நபர் எடுத்த பிழையான தீர்மானத்தைக் குறித்து பார்க்க இருக்கின்றோம். யார் அந்த மனிதன்? அவர் எடுத்த தவறான முடிவு என்ன? வாருங்கள் பார்ப்போம்.

## 03. யூதாஸ் காரியோத்தின் முடிவு

யூதாஸ் என்று சொல்லும் போதே அவருடைய காரியங்கள் உங்களுக்குப் புரிந்திருக்கும் என நினைக்கின்றேன். யூதாஸ் இயேசுவின் சீஷனாக அவரோடே இருக்கும் பாக்கியம் பெற்றவனாக இருந்த போதிலும் அவன் தன் வாழ்வின் பல கட்டங்களில் பல தவறான தீர்மானங்களை எடுத்து சபிக்கப்பட்டுப்போனதை நாம் யாவரும் அறிவோம்.

யூதாசின் தீர்மானங்களிற்குச் செல்வதற்கு முன்பதாக அவரைக் குறித்து சிறு அறிமுகத்தை உங்களுக்கு தர விரும்புகின்றேன். பிரயோசனமாக இருக்கும். படித்துப் பாருங்கள்.

யூதாசின் பெயரோடு ஸ்காரியோத் என்பது சேர்த்து வருகின்றது. ஸ்காரியோத் என்றால் 'கீரியோத் ஊரான்' என அர்த்தம் கொள்ளப்படும். இந்த ஊரானது யூதேயா தேசத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதாசைத் தவிர ஆண்டவர் இயேசுவின் மற்ற பதினொரு சீஷர்களும் கலிலேயா நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

யூதாசின் முற்சரித்திரத்தைப் பற்றி அவ்வளவாக அறியமுடியவில்லை. இருப்பினும் இவன் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தினாலேயோ அல்லது இயேசுவின் பார்வையினாலேயே ஏவப்பட்டு அவருடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்திருக்க முடியும்.

யூதாஸ் இயேசுவின் சீஷர் குளாமிற்குள் வந்த பிற்பாடு இயேசுவானவர் நன்மை செய்கிறவராகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்டவர்களை விடுவிக்கிறவராகவும் சுற்றித்திரிந்த நாட்களில் அவர்களுக்குக் கிடைத்த பண உதவிகளையும், காணிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவும் அதனை செலவழிக்கவும் ஒருவன் தேவையானபடியால் அப் பொறுப்பிற்கு யூதாஸ் நியமிக்கப்பட்டார்.

இவ்வளவு உயர்வினை யூதாஸ் பெற்றிருந்தாலும் அவன் பொருளாசைக் காரணாக இருந்தபடியால் அவனால் தன் வேலையை நிதானமாகச் செய்ய முடியவில்லை என்பதனை காணமுடிகின்றது. ஏனெனில் இறுதியில் 30 வெள்ளிக்காசிற்காக தன் எஜமானையே காட்டிக்கொடுக்கும் அளவிற்கு ஒரு கீழ்த்தரமான நிலையில் யூதாஸ் காணப்பட்டான்.

இப்படிப்பட்ட யூதாசை கர்த்தர் ஏன் தெரிந்து கொண்டார் என்பது கேள்வி யாகும். சிலவேளைகளில் இவன் தன் கருமத்தில் சமர்த்தனாக இருந்திருக்க முடியும். அத்தோடு சுவிசேஷத்தின் உண்மை இவனுக்குள் வெளிப்பட்டது. தன் கடமையைச் சரியாகச் செய்து தேவனுடைய நல்ல பங்கைப் பெற்றுக் கொள்ள இவனுக்கு இடமிருந்தது. ஆனால் பொருளாசையின் நிமித்தம் இவன் கெட்டுப்போனான்.

இன்றும் வாலிபப் பிள்ளைகளே தேவன் எம் மீது அநாதி அன்பு வைத்துள் ளார். அவரது கிரியைகள் எமது வாழ்வில் புதிதாகவே உள்ளது. இருப்பினும் அக் கிருபைகளை இழப்பதற்கு காரணம் என்ன? சிந்தித்துப்பாருங்கள். யூதாஸிற்கு பணத்தின் மேல் கட்டுப்படுத்த முடியாத ஆசை இருந்தது.

அது போலவே தேவ கிருபையைப் பெற்ற நாமும் ஏதோ ஒரு ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல் எல்லை தாண்டிப் போவதனாலேயே தேவ கிருபையை இழந்து அவமானப் பள்ளத்தாக்கில் விழுந்து போகின்றோம்.

இயேசுவோடு மூன்றரை வருடங்கள் மிக நெருக்கமாக இருக்கும் கிருபை கிடைத்தும் அவனது பொருளாசை அவனைத் தற்கொலைக்கு நேராக வழிநடத்தியது. அது போலவே எமது கட்டுங்கடங்காத ஆசைகளைக் குறித்தும் இன்றைய நாளில் இருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தொடர்ந்தும் வருகின்ற இதழ்களில் யூதாசைக் குறித்து இன்னும் சற்று விளக்கமாக பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ திருமதி. J.பிலிப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 2024ஆம் ஆண்டின் இறுதி நாட்களுக்குள் வந்திருக்கும் சகோதரிகளே 'கர்த்தர் நல்லவர்' என பெண்களின் பக்கம் கூறுகின்றது. ஆனால் எனது ஆண்டவர் எனக்கு இவ் ஆண்டு என்னுடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் நல்லவராக இருக்கவில்லை என்று சிந்திக்கிறாயா? யாருக்கு அவர் நல்லவர்?

**புலம்பல் 3:25 தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் <u>கர்த்தர் நல்லவர்.</u>**

இவ்வாண்டு முழுவதும் நீ அவரைத் தேடி அவருக்காய் காத்திருந்தாயா? அல்லது கொஞ்ச நாட்கள் காத்திருந்து பொறுமையை இழந்து உன் சொந்த தீர்மானத்தின்படி செயற்பட்டாயா? உனக்கு ஏற்பட்ட துன்பத்தின் நிமித்தம் இன்று நீ 'கர்த்தர் எனக்கு நல்லவர்' என்று கூறமுடியாத நிலையில் இருக்கிறாயா? காரணம் அவசரமாய் எடுத்த தீர்மானங்களா? சற்று சிந்தித்துப்பார்.




## 01. சாராள் கண்டது துஷ்டன்

சாராள்விட்ட தவறை கண்டாயா? கர்த்தர் கொடுத்த வாக்கு என்ன?

**ஆதியாகமம் 15:5 அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நடந்தது என்ன? சாராளால் தேவனுடைய வேளைக்கு காத்திருக்க முடியா மல் போய்விட்டது. அவசரமாய் ஒரு தீர்மானம் எடுக்கின்றாள். அடிமைப் பெண்ணோடு சேரும் அவளால் என் வீடு கட்டப்படும் என்று கூறி அவளைத் தன் புருஷனாகிய ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள்.

நடந்தது என்ன? துஷ்ட மனிதனைக் கண்டாள்.

**ஆதியாகமம் 16:12 அவன் துஷ்டமனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார்.**

கர்த்தருக்காய் காத்திருக்க முடியாமல் போனபடியால் அனேக துன்பங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

## 02. அன்னாள் கண்டது தீர்க்கதரிசி

சகோதரியே அன்னாளை உன் முன்னிறுத்திப்பார்.

**1சாமுவேல் 1:6 அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்.**

அவளுக்குப் பிள்ளையில்லாதபடியால் சக்களத்தி அவளை துக்கப்படுத்தி, விசனப்படுத்தினாள். ஆனால் அன்னாள் செய்த காரியம் என்ன? கர்த்தரை மட்டும் நோக்கி விண்ணப்பம்பண்ணினாள். இருதயத்திலே பேசினாள். இதைப் பார்த்த ஏலி அன்னாள் குடித்திருக்கிறாள் என்று நினைத்து உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றார். அதற்கு அன்னாள் அப்படியல்ல ஆண்டவரே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ. நான் திராட்சை ரசமாகிலும், மதுவாகிலும் குடிக்கவில்லை. நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாள். அதற்கு ஏலி சமாதானத்துடன் போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக என்றார். அன்னாள் தன் தேவையை கர்த்தரிடம் விண்ணப்பித்தாள். காரணம் அவர் 'நல்லவர்' என்பதை அறிந்திருந்தாள். சில நாட்கள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள். 'கர்த்தர் அவளுக்கு நல்லவராகவே இருந்தார்'.

இன்னும் சொற்ப நாட்களில் இவ் வருடம் 2024ஆம் ஆண்டு முடிவடையப்போகிறது. உன்னுடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார். சாராள் போன்று கர்த்தருடைய வேளைக்கு காத்திருக்க முடியாமல் எடுத்த சொந்த தீர்மானத்தின்படி செயற்பட்டபடியினால் துன்பத்தை அனுபவிக்க நேரிட்டது. ஆனால் அன்னாள் துன்பத்தின் மத்தியில் வாழ்ந்தாலும் கர்த்தரை மட்டும் நோக்கி மனங்கசந்து விண்ணப்பம் பண்ணினாள். பதிலை அவள் கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது. சகோதரியே இவ் வருடம் முழுவதும் நீ எப்படி உன் தேவனைத் தேடி பின்பற்றி வந்தாய் என்பதை நீ சிந்திக்க வேண்டும். அவருடைய பதிலுக்காய் காத்திருந்தாயா? உன் முழு ஆத்துமாவுடன் கர்த்தரை தேடினாயா? சிந்தித்துப்பார்? காத்திருக்க முடியாமல் எடுத்த தீர்மானங்கள் நிமித்தம் துன்பத்தை அனுப வித்து 'கர்த்தர் நல்லவர்' என்று கூறமுடியாமல் இருக்கிறாயா?

இதை வாசிக்கும் போது ஓர் தீர்மானம் எடு. சாராள் போல அவசரமாய் பிழையான தீர்மானங்கள் எடுக்காமல் அன்னாளைப் போல கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி உன் இருதயத்தை அவர் சமூகத்தில் மட்டும் ஊற்றிவிட்டு அன்னாளைப் போல இனி துக்கமுகமாயிருக்காதே. அன்னாளை நினைத்த கர்த்தர் நிச்சயம் உன்னையும் நினைப்பார். அப்போது உன்னாலும் 'கர்த்தர் எனக்கு நல்லவர்' என்று கூறமுடியும்.

**சங்கீதம் 34:8 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக் கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**



## வினா விடை - 124

01. 'என் குடும்பம் மிகவும் எளியது' என்றது யார்?
02. 'முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறவர்கள்' யார்?
03. நீதிபரர் யாருடைய வீட்டைக் கவனித்துப் பார்க்கிறார்?
04. 'வீணானவைகளுக்காக தங்கள் மகிமையை மாற்றினவர்கள்' யார்?
05. 'எனக்கு கோபம்மூட்டி என் உடன்படிக்கையை மீறுவார்கள்' என்று சொன்னது யார்?
06. 'உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம்' என்று வந்தவர்கள் யார்?
07. 'அது உனக்குப் பாவமாயிருக்கும்' எது?
08. யாருடைய வீடு குப்பை மேடாக்கப்படவுங்கடவது?
09. 'கர்த்தருடைய கட்டளையையும்... மீறினதினாலே பாவஞ்செய்தேன்' என்றவர் யார்?
10. 'கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினவன்' யார்?



**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

| வினாவிடை - 123 | குறுக்கெழுத்துப் போட்டி - 121 |
|---|---|
| இ.லக்சிகா | சு.பராசக்தி |
| (பள்ளிக்குடா) | (பாண்டவெட்டை) |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரிண்ட்லர்
## 1677 - 1720



## பொறுப்பு காத்திருக்கிறது

கிரிண்ட்லர் மண்ணில் விதைக்கப்பட்ட நாள். தரங்கம்பாடி சரித்திரத்தில் அழியாப்புகழ் பெற்ற மாணிக்கம் ஒன்று மண்ணில் வீழ்ந்தநாள்.

தரங்கம்பாடியில் முதல் தமிழ்க் கிறிஸ்தவர்களின் காலத்தில் சீகன்பால்குடன் திறம்பட பணியாற்றியவரே கிரிண்ட்லர். ஆழ்ந்த அறிவுத் திறன் உள்ளவர். ஓயாமல் உழைப்பதில் மகிழ்ச்சி காண்பவர்.

சீகன்பால்குவின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். 'ஆயிரக் கணக்கானவர்களிலிருந்து ஒருவரைத்தான் தெரிந்தெடுக்க வேண்டியிருந்தாலும், அவர்களுக்குள் கிரிண்ட்லரைத் தான் தெரிந்தெடுந்து, என் பொறுப்பை அவரிடமே கொடுப்பேன். அவரே என் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்' என்று கிரிண்ட்லரைப் பற்றி சாட்சி பகர்ந்தார் சீகன்பால்கு.

ஜெர்மனி நாட்டில் தன் கல்வியை கற்றுக் கொண்டிருக்கும்போதே இந்தியாவைக் குறித்த தாகம் நிறைந்தவராகக் காணப்பட்டார் கிரிண்ட்லர்.

1709ஆம் ஆண்டு தரங்கம்பாடியை அடைந்த இவர், தமிழ் மொழியை கருத்தூன்றிப் படித்தார். மக்களிடம் தமிழில் பேச ஆரம்பித்தார். சீகன்பால்கைப் போன்று கால்நடையாகவே சுற்றித்திரிந்து பல கிராமங்களுக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தார். குறுகிய காலத்தில் கிரிண்ட்லர் ஆற்றிய தொண்டு மக்கள் உள்ளத்தை கவர்ந்தது. அநேக மக்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகன்பால்கு மரித்தபின் சபைகளின் பொறுப்பை கிரிண்ட்லர் ஏற்றார். சீகன்பால்குவின் மரணம், இவரை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. ஆயினும் நம்பிக்கையுடனும், ஜெபத்துடனும் தன் பணியைத் தொடர்ந்தார். அயராத ஓட்டம் இவருக்கு உடல் நலக்கேட்டை வருவித்தது. தன் பொறுப்புக்களை உடன் மிஷனெரிகளிடம் ஒப்படைத்து மார்ச் 19ஆம் நாள் தரங்கம்பாடி மண்ணில் தலையைச் சாய்த்தார்.

**அன்பரே! உண்மையுடனும், உத்தமத்துடனும் உமது பணிகளை நிறைவேற்றுகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இப்போது உயிரோடிருக்கும் நாம், இப்பணியின் பயனை ஒருவேளை காணமாட்டோம். ஆனால் நமக்கு பின்வரும் சந்ததியார் நிச்சயமாக அதனைக் காண்பார்கள் – கிரிண்ட்லர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 19**



# கடவுளின் யோவான்
# 1495 - 1550

## தாராளமாகக் கொடுங்கள்

கடவுளின் யோவானைப் பற்றிய புகழ் நாடெங்கும் பரவியிருந்த காலம் அது. மாகாணத்தின் பிரபு இவரைப் பற்றிக் கேள்விப்பட்டார். யோவானை சோதித்துப் பார்க்க எண்ணினார்.

என்ன செய்வது? ஏழையைப் போன்ற வேடம் அவர் மனதில் உதித்தது. ஏழையாக வேடம் பூண்டார். யோவானை தேடி வந்தார். தான் ஒரு ஏழை என்றும் தனக்கு உதவும்படியும் வேண்டினார்.

கொடுப்பதை தன் இன்பமாகக் கொண்ட யோவான் உதவி செய்யாமலிருப்பாரோ? தன்னிடமிருந்த 25 பணங்களையும் அப்படியே அவருக்குக் கொடுத்தார். அப்பிரபு அப்பணங்களை பெற்றுக்கொண்டு தம் மாநிலம் திரும்பினார்.

யோவானின் தியாக மனதையும், அன்பான உள்ளத்தையும் கண்ட அப்பிரபு 150 தங்கச் சவரண்களை அனுப்பியதோடு ஒவ்வொரு நாளும் 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொட்டியும், 4 ஆடுகளும், 6 கோழிகளையும் யோவான் நடத்தி வந்த ஆதரவற்ற ஏழைகளின் விடுதிக்கு அனுப்பி வந்தார்.

கி.பி 1540இல் ஏழைகளுக்காக விடுதியை ஆரம்பித்த யோவான், விறகு வெட்டி, அதனை விற்று அதில் வரும் ஊதியத்தைக் கொண்டே தன் விடுதியை நடத்தலானார். பின்னர் அவரின் தியாகச் செயலால் பலர் உதவிட பல விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன.

'நன்மை செய்யும் சகோதரர்' என்ற அமைப்பின் மூலம் இன்றும் சுமார் நூறு மருத்துவமனைகள் யோவானின் தியாகத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

விடுதியில் தங்கிய மக்கள் மட்டும் அல்லாமல், அதனை சுற்றியிருக்கிற அத்தனை மக்களின் சரீர, ஆத்மீக நலனிலும் கரிசனையுள்ளவராகவே வாழ்ந்தார். கிறிஸ்துவின் அன்பு இவரை முற்றிலும் ஆட்கொண்டதால், தாராளமாய் கொடுக்கும் தியாக சிந்தை இவரில் செழித்தோங்கியது. இவரை அண்டி வந்தவர் அனைவருக்கும் அடைக்கலமானார்.

**அன்பரே! கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்து வருகின்றீர்களா?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நான் ஒரு அற்பன்; ஒரு நீச பாவி; எனினும் என்னால் இயன்ற உதவிகளை ஏழை மக்களுக்குச் செய்யாமலிருக்க முடியுமோ?
— கடவுளின் யோவான் —

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 16**

# குறுக்கெழுத்துப் போட்டி - 121, வினா விடை - 123

## சரியான விடை எழுதியவர்கள்

**பாண்டவெட்டை**
01. மோ.ஜெசிந்தா
02. சி.சுமித்திரா
03. சி.சிவனேஸ்வரன்
04. நா.றமேஸ்
05. ற.ஜெசிந்தா
06. சு.பராசக்தி
07. சு.திரிசாள்
08. சு.சுதர்சன்
09. சு.சுதாகரன்
10. சு.கருணாகரன்

**பள்ளிக்குடா**
11. இ.லக்சிகா


**திருநெல்வேலி**
12. ந.செல்வன்



*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




**பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்குள் வரும் போது பெரும்பாலும் காணத்தக்கதாக வருவார்: ஆனால் தேவனுடைய ஆவியானவர் ஒருவரை விட்டுச் செல்கின்ற போது அமைதியாக சென்றுவிடுவார் என்பது பொதுவான கருத்தும் நாங்கள் அறிந்திருக்கின்ற சத்தியமு மாகும்.**

நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட நேரத்தை நினைக்கின்ற போது, ஆண்டவரை புகழ்ந்து, கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து, அந்நிய பாஷையில் பேசி அந்நேரத்தில் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதை மற்றவர்கள் கண்டு கொண்டிருப்பார்கள்.

ஆனால் தேவ ஆவியானவர் ஒருவரை விட்டு செல்கின்ற போது அது யாருக்குமே தெரியாது. அவர் மெதுவாகச் சென்றுவிடுவார். அசுத்த ஆவி ஒரு மனிதனை பிடிக்கிற போது எந்த சத்தமும் சந்தடியும் இல்லாமல் பிடிக்கும். ஆனால் அது ஒரு மனிதனை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்கின்ற போது அவர்களை அலைக்கழித்து, துன்பப்படுத்தி சத்தமிட்டுச் சென்றுவிடும்.**

ஆகவே இந்த நாட்களில் தேவ ஆவியானவரை பெற்றுக் கொள்வதும், அந்த தேவ ஆவியானவரை எங்களுக்குள் காத்துக் கொள்வதும் மிகவும் அவசியமான காரியமாகும். இயேசு சொன்னார்: **"நான் சென்று தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அனுப்புவேன்"** என்று. இந்த கடைசி நாட்களில் நாம் ஒவ்வொருவரும் தேவ ஆவியானவரைப் பெற்றுக் கொண்டு தேவ ஆவியானவர் விரும்புகின்ற வண்ணமாய் சாட்சியுள்ள வாழ்க்கை வாழும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

**அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.**

எனவே தேவ ஆவியானவர் ஒருவரை நிரப்புகின்ற போது அந்த மனிதனுடைய நோக்கம் எதுவாக இருக்குமென்றால்: 'என்னைப் பாவச் சேற்றிலிருந்து தூக்கி எடுத்து இரட்சித்த தேவனுக்கு நான் சாட்சி' இது தான். தேவ ஆவி எங்களுக்குள் வருகின்ற போது எங்களுக்குள் ஏற்படுகின்ற நிலையும், நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதும் தேவனுடைய எதிர்பார்ப்பாகும்.

சகோதரன் வெஸ்லி மக்ஸ்வெல் அவர்கள் ஆவியானவரைப் பற்றிய சிறப்பான காரியத்தை காண்பித்தார். தண்ணீருக்குள் கணுக்கால் அளவு செல்கின்ற போது எங்களுடைய மாம்சத்தின் மிகுதி பகுதி தண்ணீருக்கு மேலே தெரியும். முழங்கால் அளவு தண்ணீருக்குள் சென்றாலும் எமது மாம்சத்தின் கிரியைகள் வெளிப்படும். இடுப்பளவு தண்ணீருக்குள் சென்றாலும் மாம்சத்தின் கிரியை வெளிப்படும். ஆனால் நீச்சல் ஆழம் என்பது அந்த நதியின் தண்ணீர் எந்தப் பக்கம் அடித்துச் செல்கின்றதோ அந்தப் பக்கம் தான் மனிதன் செல்வான். முற்றும் முழுவதுமாய் தேவனுடைய ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிற மனுஷன் தேவனுடைய விருப்பம், சித்தம் என்று சொல்லி தேவன் வழிநடத்துகின்ற விதத்தில் தேவனுடைய இதய துடிப்பை அறிந்து தேவன் எதை விரும்புகின்றாரோ அதை நிறைவேற்றி வாழ வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டும்.

**அப்போஸ்தலர் 1:8** இல் காணப்படுகின்ற வார்த்தையிலிருந்து சில காரியங்களை கண்டு கொள்ள முடியும். நாங்கள் எந்த இடத்திலிருந்தாலும் அந்த சாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டும். இன்னொரு காரியம் என்னவென்றால், இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையும், தனக்குத்தான் சாட்சியாக இருப்பதும் அதற்குள் மறைந்திருக்கிறது. அதாவது நான் எனது சொந்த வாழ்வில் ஆவியானவருக்கு சாட்சியாக இருக்கின்றேனா? என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள். அதாவது மற்றவர்கள் பாராதபடி நான் என்னுடைய வாழ்வில் தேவனுக்கு சாட்சியாக இருக்கின்றேனா என்று கண்டு கொள்ள வேண்டும். எருசலேமின் சாட்சி என்பது: நான் என்னோடு - எனக்குள் இருக்கிற ஆவியானவருக்கு மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியாத வாழ்க்கையின் பகுதிக்குள் இருக்கின்ற காரியங்களில் சாட்சியாக இருப்பது. தேவ ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் எப்போதும் உங்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பீர்கள். நான் என்னை அபிஷேகித்திருக்கிற ஆவியானவருக்கு எப்போதும் சாட்சியுள்ளவனாக இருக்க வேண்டும். பலவேளைகளில் மற்றவர்கள் பார்க்கின்ற போது சாட்சியாக இருப்போம், ஆனால் எமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவருக்கு சாட்சியாக இருக்க வேண்டும்.

பொதுவாக பல கிறிஸ்தவர்கள் சாட்சியாக இருப்பது என்பதை தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துவதோடு மட்டும் அடையாளப்படுத்துவர். பலபேர் மத்தியில் ஆவியானவரின் வல்லமையால் ஒரு அற்புதம் செய்வது அல்லது ஒரு மனிதனுக்காக ஜெபிக்கின்ற போது உடனடியாக அவனுக்குள் மாற்றம் வருவது தான் ஆண்டவருக்கு சாட்சி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்: **"நான் போவது உங்களுக்கு நல்லது, அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் வருவார்"** என்று இயேசு கூறினார். அவ்வாறே அவர் சென்று பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். எனவே இயேசு கிறிஸ்து எங்களை விட்டு சென்று தான் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார் என்ற கேள்வி எங்களுக்குள் வரலாம். உண்மையில் இயேசு கூறிய அந்த வார்த்தையின் மூலம் அனுப்பிய ஆவியானவர் எங்களிடத்தில் வருகின்ற போது அவர் வந்து இயேசுவினிடத்திலிருந்து எடுத்து எங்களுக்குப் போதிக்கின்றார். அந்த ஆவியானவர் பிதாவின் ஆழங்களை அறிந்தவர் எங்களோடு இருப்பதால் தேவனோடு இருக்கிற உன்னதமான உறவில் இன்னும் நெருக்கமான நிலைக்குள் எங்களை கொண்டு செல்கிறார்.

இயேசு போய்விட்டார், அவர் கைவிட்டார் என்று இல்லை அவர் சென்றார் தான் ஆனால் **"அவர் அனுப்பிய ஆவியானவர் இயேசுவின் இரகசியங்களை எங்களுக்கு சொல்லித் தருகின்றார்."** அந்த ஆவியானவர் இயேசு வாழ்ந்த முறைகளை எங்களுக்குள் புகுத்துகின்றார். இயேசுவின் சொரூப லட்சணங்களை எங்களுக்குள்ளே நாட்டுகிறார். இயேசு எங்களுக்கு காண்பித்த முன்மாதிரி நிலையை கைக்கொள்வதற்காக அவருடைய வார்த்தைகளை எங்களுக்குள் போதிக்கிறார். நாம் வழி விலகுகின்ற போது, இதுவே வழி! இதிலே நடவுங்கள்! என்று சத்தியத்தை எங்களுக்குள் விளங்கப் பண்ணுகிறார். பலபேர் மத்தியில் தேவனை மகிமைப்படுத்துவது, கரங்களை வைக்கின்ற போது குணமாகுவது எல்லாம் சாட்சி தான். ஆனால் இவை மட்டும் தான் சாட்சி என்று எங்களுடைய எண்ணம் இருக்கக்கூடாது. இது மட்டும் தான் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற சாட்சி முறை அல்ல, இதை விட எங்களுடைய தனிப்பட்ட வாழ்வோடு சம்பந்தப்பட்ட ஏராளமான சாட்சி முறை உண்டு.

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் தனக்காக சாட்சியாக நிற்க வேண்டும் என்று இயேசு சொன்னார். சாட்சியாக இருப்பது என்பது அற்புதம் - அடையாளம் செய்வதோடு சம்பந்தப் பட்டிருப்பதும், அதைவிட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப்பெற்றவர்கள்நிந்தையை சகித்தலோடும், பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து சாட்சியாக இருப்பதோடும் சம்பந்தப்பட்டது. அத்துடன் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பதற்கும் ஆயத்தமாக இருப்பது. மற்றவர்களுக்காக அழுது பெருமூச்சுவிட்டு விண்ணப்பம் செய்வது. மன உருக்கத்துடன் மக்களை சந்திப்பது இவைகள் எல்லாம் ஆவியானவரை பெற்ற மனிதர்கள் தேவனுக்காக வாழ வேண்டிய சாட்சியின் முறைகள். அன்றாட வாழ்வில் முகம் கொடுக்கிற பிரச்சினைகளை எப்படி அணுகுகின்றோம் என்பதில் கூட பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்கள் சாட்சியாக இருக்கிறோமா? இல்லையா? என்பதை காணக்கூடியதாக இருக்கும்.

## 01. கட்டுக்களில் இருந்து விடுதலையாகி தேவனுக்காக வாழ்வதற்கு தேவ ஆவியானவரின் அபிஷேகம் தேவை.

தேவனுடைய வசனத்தை அறிந்த விசுவாச மக்களிடம் வெளியே தெரியாத பல கட்டுக்கள் உண்டு. கட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கு தேவ ஆவியின் அபிஷேகம் வேண்டும்.

**11கொரிந்தியர் 3:17 கர்த்தரே ஆவியானவர்: கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.**

ஆவிக்குரிய ரீதியிலே விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ்கின்றோம் என்றால் அதற்கு அபிஷேகம் வேண்டும். அப்படிப்பட்ட கட்டுக்களில் இருந்து வெளியேவரவில்லை என்றால் நாங்கள் தேவ ஆவியானவரின் சரியான விடுதலையைப் பெற்றுக் கொள்ளவில்லை. தொடுதலை பெற்றிருந்தால் எங்களுடைய உள்ளான வாழ்வில் இருக்கிற கட்டுக்கள் அனைத்தும் அறுக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்ட அந்த சந்தர்ப்பத்திலே அதிகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பீர்கள்.

*ஒரு சகோதரி கூறினார்: நான் இயேசுவை ஏற்றுக் கொண்டமையினாலே என் சகோதரன் என்னோடு பேசுவதில்லை. அவர்கள் எனக்கு செய்த உதவிகளையெல்லாம் நிறுத்திவிட்டார்கள். நான் இயேசுவை ஏற்றுக் கொண்டது அவர்களுக்கு அவமானம், நிந்தை என்று நினைத்து என்னை வெறுத்துவிட்டார்கள் என்று.*

ஆரம்பத்திலே தேவனை ஏற்றுக் கொள்கின்ற போது பெரிய பாடுகள், அவமானங்கள், நிந்தைகளுக்கு முகம் கொடுத்து வருவோம். இந்த அனுபவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களில் அனேகருக்கும் ஏற்பட்டிருக்க லாம். இப்போது உங்களுடைய ஆரம்ப நாட்களை நினைத்துப் பாருங்கள். ஆண்டவரை அறிந்து ஆலயம் வருகின்ற போது எப்படிப்பட்ட தடைகள் எல்லாம் வந்தது, அந்த நேரத்திலே வந்த துன்பத் திற்கெல்லாம் முகம் கொடுத்தீர்களே! தேவனுடைய வார்த்தையின் தாற்ப் பரியம் புரிந்த போது, **இயேசு தான் இரட்சகர்** என்று புரிந்த போது எத்தனையோ தடைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு ஆண்டவரே என்று அவரை நம்பி வந்தீர்கள். ஆனால் இன்றைக்கு எல்லோரிடமும் இயேசு சொல்கின்ற அத்தனை சத்திய வார்த்தைகளையும் கேட்டு அதற்கு பூரணமாக கீழ்ப்படிகிறோமா?

இன்றைக்கு நெருக்கத்தைக் கண்டு, பல வேளைகளில் நெருக்கம் வரும் என்று எதிர்பார்த்துக் கூட சத்தியத் தைக் கைக்கொள்ளாமல் விட்டு விடுகி றோம். தேவனுடைய பூரண சத்தியத்தை நடைமுறைப்படுத்த எதெல்லாம் தடை யாக வருகிறதோ அதையெல்லாம் தாண்டியவர்களாய் ஆண்டவருக்கு சாட்சியாக இருக்க வேண்டும்.

இயேசு கூறிய வாழ்க்கை முறையை நீங்கள் வாழாவிட்டால் தேவ ஆவியானவரின் சரியான தொடுதலைப் பெறவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவை நான் அறியேன், அவரை எனக்குத் தெரியாது என மறுதலித்த பேதுரு பயம் என்ற கட்டி னாலே கட்டப்பட்டவராக காணப்பட்டார். **மத்தேயு 26:70-74**

ஆனால்இயேசு கூறிய வார்த்தை யின் படி எருசலேமிலே காத்திருந்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத் தைப் பெற்றுக் கொண்ட போது பேதுரு எழுந்து நின்று; இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறி அவரை நீங்கள் கொலை செய்தீர்கள், ஆனால் தேவன் அவரை எழுப்பினார். அதற்கு நாங்களெல் லாரும் சாட்சிகள் என சாட்சியாக பேசினார் **(அப்போஸ்தலர் 2:23,32).**

தேவனுக்கு சாட்சியாக இருப் பதற்கு அபிஷேகம் அவசியம்.

## 02. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக வரும் பிரச்சினைகளின் போது சரியான முடிவெடுப்பதற்கு அபிஷேகம் வேண்டும்.

**அப்போஸ்தலர் 4:8 அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதி காரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே,**

அன்று அப்போஸ்தலர் செய்து வந்த ஊழியத்தின் நிமித்தம் நடந்த ஒரு எதிர்ப்பின் நேரத்தில் பேதுரு பரிசுத்த ஆவியால் நிறைந்து பிரச்சினைக்கு முகம் கொடுத்தார். தேவனுடைய பிள்ளைகளாகிய எமக்கு பிரச்சினை வருகின்ற போது எப்படி அதற்கு முகம் கொடுக்கிறோம். பிரச்சினைகளின் போது சுயபுத்தினால் பதில் கொடுக்காமல் தேவ ஆவியினால் பதில் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையின் நேரத்தில் தேவ ஆவியானவரின் அபிஷேகத்துடன் முகம் கொடுத்தீர்கள் என்றால் உண்மையில் நீங்கள் தேவனுடைய சாட்சி.

எங்களுக்கு வருகின்ற எதிர்ப்பை சந்திப்பதற்கு மனித பலத்தை அல்ல தேவ ஆவியின் பெலத்தை நாட வேண்டும். நெருக்கப் படுகின்ற போது தேவ ஆவியானவரின் பாதத்தில் அமர்ந்து ஆண்டவரே என்று சொல்கின்ற போது சரியான ஞானத்தை எமக்கு தந்து சரியாக நடத்துவார். அப்படி நடக்கிற போது எங்களுக்கு கஷ்டமாக, நிந்தையாக கூட இருக்கலாம். அல்லது எங்கள் மேல் விழுந்த அடி காயங்கள் மாறாததாக கூட இருக்கலாம். நீ அப்படி நடக்கிற போது உன்னை அழைத்த தேவனுக்கு சாட்சியாக இருப்பாய்.

எங்களுடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் வந்திருந்தால் தேவனுடைய சத்தியமுறை எல்லாவற்றையும் எங்களுடைய வாழ்க்கைக்குள் கொண்டு வருவதற்கு தடையாக இருக்கிற எல்லா தடைகளையும் உடைத்தெறிந்து தேவனுடைய சத்தியத்தில் வாழ்ந்து சாட்சியாக இருப்போம்.

## 03. பெருமூச்சோடு மற்றைய மக்களுக்காக ஜெபிக்க தேவ ஆவியின் அபிஷேகம் வேண்டும்.

**ரோமர் 8:26 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.**

எங்களுக்காக ஆவியானவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார் என்று கருதுகிறோம் அது உண்மை. ஆனால் இன்னொரு சத்தியம் இதற்குள் புதைந்திருக்கிறது. பெருமூச்சோடு வேண்டுதல் செய்கிற ஆவியானவரை நாம் பெற்றிருந்தால் இன்றைக்கு பாவத்தில் மூழ்கி விழுந்து கொண்டிருக்கிற மனிதர்களுக்காக ஆவியானவரோடு இணைந்து பெரு மூச்சோடு விண்ணப்பம் பண்ணுவோம்.

பெருகி வருகிற பாவங்களின் நிமித்தம் இரட்சிக்கப்படாமல் பாதாளம் செல்கிற மக்களை நினைத்து இருக்கிற இடத்திலிருந்து அந்த ஆவியானவரோடு இணைந்து எத்தனை பேர் பெருமூச்சோடு ஒரு துளி கண்ணீர் சிந்தி ஜெபித்தீர்கள். தேவனுடைய அபிஷேகத்தை பெற்றிருந்தால், அந்த அபிஷேகத்தை காத்திருந்தால் மற்றவர்களுக்காக ஜெபித்து ஆண்டவருடைய பார்வையில் சாட்சியுள்ளவர்களாய் இருப்பீர்கள். தேவனின் அன்பைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கி இருப்பவர்களுக்காகவும், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு மறுபடியும் உலகத்தின் போக்கோடு ஓட தங்களை அர்ப்பணத்தவர்களுக்காக வும் ஆண்டவரே இந்த பின்மாற்றம் அடைந்த ஆத்துமா உம்மிடம் வரவேண் டும் என்று எப்போது ஜெபித்தீர்கள், அப்படி ஜெபிக்கவில்லை என்றால் அதற்கான அபிஷேகத்தை நீங்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

என் ஜெபங்களில் எப்போதும் உங்களை நினைத்து இடைவிடாமல் உங்களுக்காக ஜெபம் செய்கிறேன் என்று பவுல் சொல்கிறார். பவுலுக்கும் 24 மணித்தியாலங்கள் தான்; எங்களுக்கும் 24 மணித்தியாலங்கள் தான். ஒரு நாளில் அதிகமான மணித் தியாலங்களை ஆண்டவர் தந்திருக் கலாம் என்று நினைக்கிறீர்களா, கொஞ்சத்தில் உண்மையில்லாத வன் அனேகத்திலும் உண்மையாய் இருக்க மாட்டான். 24 மணித்தியாலம் போதாது என்று யாராவது கூறினால், தேவனு டைய நியமங்கள் பிழை என்று கருது கின்றீர்கள். அவர் செய்த காரியங்கள் தவறு என்று அறிக்கையிடுகிறோம். அவரைக் குற்றப்படுத்துகிறோம், காலையில் எழுந்து ஜெபத்தோடு அந்த நாளை ஆரம்பியுங்கள். தேவனுடைய ஆவியானவர் உங்களோடு இருப்பதால் அந்த நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்கும்.

நாங்கள் படிக்கின்ற நாட் களில் சொல்வோம், இந்த வருடம் போகுதே இல்லை என்று. ஏனென் றால் படிப்பு பாகற்காய் போன்று இருக்கும். ஆனால் இப்போது வருஷம் போகின்ற வேகத்தைப் பார்த்தால் கொஞ்சமாவது அந்த வேகம் குறை யாதா என்று எண்ணத் தோன்றுகிறது. இவைகள் ஆண்டவர் சீக்கிரம் வரப் போகிறார் என்பதற்கு அடையாளம். எனவே உலகத்தில் அழிகின்ற மக்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் - இதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்க வேண்டும். எசேக்கியேல் சொன்னார்: திறப்பின் வாசலில் நிற்க ஒருவனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் என்று. இன்றைக்கு ஒரு தீர்மானம் எடுங்கள்: ஆண்டவரே என்னை அபிஷேகம் பண்ணும் என்று கேளுங்கள்.

தேவனை நீண்ட காலமாக அறிந்தவர்கள் தேவ ஆவியின் அபிஷே கத்தை பெற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து அப்படியே இருக்க விரும்பாதீர்கள். நான் அபிஷேகம் பெற்றுக் கொள்வ தற்கு மற்றவர்கள் தடையென்று பழியை மற்றவர்களிடம் போடாமல் ஆண்டவரி டம் கேளுங்கள். தேவன் தன்னுடைய மரணத்தினால் திரைச்சீலையை கிழித்து நாங்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல வழிசெய் தார். புதிதும் ஜீவனுமாகிய மார்க்கத் தின் வழியாய் மகா பரிசுத்த ஸ்தலத் திற்குள் செல்ல முடியும். ஆண்டவரு டைய பிரசன்னத்தினால் நிரம்ப முடியும். அவர் வயது வேறுபாடு இன்றி எல்லோரையும் நிரப்புவார். ஏன் இப்படியும் சொல்ல முடியும்: தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியால் நிரப்புவார். யோவான் ஸ்நானகன் தாயின் வயிற்றில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே அபிஷேகிக்கப்பட்டான். ஒரு சாட்சியுள்ள வாழ்க்கைக்கு நேராக நடவுங்கள். இன்னும் இரட்சிக்கப் படாமல் எத்தனையோ ஆத்துமாக்கள் உண்டு, இயேசு சொன்னார்: வேறே ஆடுகள் என்று. ஆகவே பெருமூச் சோடு அவர்களுக்காக ஜெபித்து தேவனுக்கு சாட்சியாக வாழ எங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

## 04. மரணம் போன்ற வேதனை வருகின்ற போது அதற்கு முகம் கொடுத்து சாட்சியைக் காத்துக் கொள்ள அபிஷேகம் வேண்டும்.

**அப்போஸ்தலர் 7:55-57 (55.)**

**அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு வானவர் நிற்கிறதையும் கண்டு: 56. அதோ வானங்கள் திறந்திருக்கிறதை யும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண் கிறேன் என்றான். 57. அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட் டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து,**

ஸ்தேவான் ஆவியினால் நிறைந்த மனிதன். மிக வேதனை யான மரணத்தை சந்திப்பதற்கு அவன் பெற்றுக் கொண்ட பெலம் அபிஷேகம் தான். அபிஷேகம் பெற்றவர்கள் மரணத்தின் நேரத்திலும் சாட்சியாக நிற்பார்கள்.

இந்த நாட்களிலேயே எத்த னையோ பேர் தேவ ஆவியினால் நிறைந்தவர்களாய் கிறிஸ்துவுக்காய் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் இந்த நாட்களில் ஆவியின் அபிஷேகத்தை பெற்று எம்மை தயார்படுத்த வேண்டும். எந்த இக்கட் டான நிலை வந்தாலும் தேவனுக்காக சாட்சியாக நிற்போம் என்று தேவ ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்காக வாழ்கிறோமா, கிறிஸ் துவை மறுதலிக்கிறோமா, சாதாரண காரியங்களுக்காக கிறிஸ்துவை மறு தலித்தால் உன்னதத்திலிருந்து வரு கின்ற ஆவியானவரை நாம் இன்னும் பெறவில்லை. தனக்கு வேதனையான மரணம்வரும்என்று தெரிந்தும்ஸ்தேவான் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண் டான். வேத ஆய்வாளர்கள் கூறுகிறார் கள்: இயேசுவினுடைய அப்போஸ்தலர் களில் வெளிப்படுத்தியவிசேஷம் எழுதிய யோவான் தவிர மற்ற அனைவரும் இரத்த சாட்சிகளாய்த்தான் மரித்தார் கள். ஒருவர் உயிரோடு தோல் உரிக்கப் பட்டு கொலை செய்யப்பட்டார். அப்போஸ் தலனாகிய பேதுரு சிலுவையில் அறையப்படும்படி கொண்டு செல்லும் போது இயேசுவைப் போன்று சிலுவை யில் அறையப்பட நான் தகுதியுள்ளவன் அல்ல என்னை சிலுவையில் தலை கீழாக அறையுங்கள் என்று வேண்டிக் கொண்டு அவ்வாறே தலை கீழாக அறைந்து கொலை செய்யப்பட்டார். ஒரு கட்டத்தில் பேதுரு இயேசுவை தனக்கு தெரியாது என்று கூறினார், ஆனால் தேவ ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற போது இயேசுவுக்காக மரிப்பதற்கும் ஆயத்தமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தேவ ஆவியைப் பெற்றிருந்தால் தேவனுக்கு சாட்சியாக நிற்பதற்கு எந்த சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதைப் பயன்படுத்துவோம். எத்தனையோ பிரச்சினை, உபத்திரவங்கள் வந்தாலும் தேவனுக்கு சாட்சியாக நிற்பதை முதன்மைப்படுத்திக் கொள்ளுங்கள். ரோமாபுரியில் நீரோ மன்னன் அப்போஸ்தலனாகிய பவுலின் தலையை வெட்டுவதற்கு அனுமதி கொடுத்து பவுல் தலை துண்டிக்கப்பட்டு மரித்தார். இவர்களெல்லாம் ஆவியினால் நிறைந்த மனிதர்கள். இதைவிட மரித்திருந்தால் நல்லது போன்ற காரியங்கள் வரும் அதன் மத்தியில் தேவனுக்கு சாட்சியாக இருங்கள்.

இந்திய தேசத்தின் சிறந்த தேவ மனிதன் சாது சுந்தர்சிங். அவர் இயேசுவை ஏற்றுக் கொண்டது அவருடைய குடும்பத்திற்கு நிந்தையாக இருந்தது. ஆகவே அவரை வீட்டிலிருந்து துரத்தி விட்டார்கள். சில காலம் சென்ற பின்பு அவருடைய வீட்டிற்கு அருகில் கூட்டம் நடைபெற்றது. எனவே சாது சுந்தர்சிங் அந்த கூட்டத்திற்கு சென்றார். கூட்டம் முடிவடைந்த பின் அருகில் தானே எனது வீடு இருக்கிறது, அங்கே சென்று பார்ப்போம் என்று சென்ற போது, அவருடைய தகப்பன் ஏன் இங்கே வந்தாய்? என்று அவரிடம் கேட்ட போது, நான் இங்கே நடைபெற்ற கூட்டத்திற்காக வந்தேன், இன்று இரவாகி விட்டது எனவே இங்கே தங்கி விட்டு செல்லலாம் என்று வந்தேன் என்றார். அப்பொழுது அந்த தகப்பன் சரி வந்து விட்டாய், இன்றைக்கு இங்கே தங்கிவிட்டுச் செல் என்று சொல்லி, வீட்டிலிருந்து தூரமான ஓரிடத்தில் அவரை இருக்கச் செய்து உணவு கொடுத்தார்கள். அவர்களுடைய முறைமையின்படி இவர் அவர்களது காரியங்கள் எதையாவது தொட்டால் அது தீட்டாகிவிடும் ஆகவே அங்கே இருக்கிற பாத்திரங்களிலோ, மனிதர்களிலோ அவர் தொடாதபடிக்கு பார்த்துக் கொண்டார்கள். ஆகவே சாது சுந்தர்சிங் சொல்கிற போது சொன்னார்: இரவு ஆகாரத்தை தன்னுடைய தகப்பன் கொண்டு வந்து தந்தார். அதன் பிற்பாடு தண்ணீர் குடிக்கிற போது அந்த பாத்திரம் என் மேலே முட்டாதபடி அவர் பார்த்துக் கொண்டார் என்று.

பெற்ற தகப்பனே அந்த பாத்திரம் அவரில் முட்டினால் நாங்கள் தீட்டுப்படுவோம் என்று கருதினார். அந் நேரத்தில் இவற்றுக்கு முகம் கொடுப்பதற்கு சாது சுந்தர்சிங்கிற்கு அந்த அபிஷேகம் இருந்திருக்க வேண்டும். சில வேளைகளில் நீங்கள் சந்திக்க முடியாத மரணத்திற்கு ஒப்பான சூழ்நிலைகள், பெரிய நிந்தனைகள் இவைகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து சாட்சியாக நிற்பதற்கு ஆவியானவரின் அபிஷேகம் வேண்டும். சாது சுந்தர் சிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் எழுதியிருந்தார்: சாது சுந்தர் சிங்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் இருந்து கண்ணீர் வந்தது என்று.

பிரியமானவர்களே, மற்றவர்கள் எங்களை கொல்லாவிட்டாலும், தேவனுக்காக இப்படியான சந்தர்ப்பங்களிலும் முகம் கொடுக்கிற போது அதை தாங்குவதற்கு உங்களுக்கு அபிஷேகம் வேண்டும். நீங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம்தான் சாட்சியாக வாழ முடியும். கர்த்தருடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார், சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார் என்று இயேசு சொன்னார். ஆகவே தேவஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தால் காண்கின்ற ஒவ்வொருவருக்கும் தேவனுடைய அன்பை சொல்லுங்கள்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வருகின்ற போது பெலன் அடைந்து எப்போதும், எந்த இடத்திலும், தேவனுக்காக சாட்சியாக இருங்கள். தேவனுடைய சமூகம் செல்ல வேண்டும் என்றால் அவருடைய பரிசுத்த ஆவி என்ற முத்திரை யைப் பெற்றவர்களாய் சாட்சி வாழ்க்கை வாழவேண்டும். அந்த நித்திய வழியில் நடத்துகின்ற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று அவருடைய வருகைக்காய் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்!

**‘தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக’**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

‘பகலிலே மது மங்கையருடன் கொண்டாடி மதப்பிலே கல்லையும் மண்ணையும் புகழ்ந்தாடி சுவரிலே சடுதியாய் தோன்றிய கையுறுப்பின் எழுத்தை வாசிக்க திண்டாடி இராத்திரியிலே மரண ஊருக்கு பறந்தோடியது யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

தீரு பட்டணத்தின் வீழ்ச்சியின் போது (எசேக்கியேல் 26:15–16)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிருபம்

அப்போஸ்தலனாகிய பவுல் இந் நிருபத்தை ஏன் எழுதவேண்டி வந்தது எனப்பார்த்தால் தேவனுடைய சகல வெளிப்பாடுகளும் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது என்ற எண்ணம் யூதர்களிடம் காணப்பட்டது. இதனால் புறஜாதியார் கிறிஸ்தவர்களாக மாறும்போது முதலில் விருத்தசேதனம் செய்ய வேண்டும் இதன் மூலம் மோசேயின் நியாயப்பிரமாணத்தை முதலில் நிறைவேற்றிய பின்னரே கிறிஸ்தவர்களாக வேண்டும் என்பது ரோம சபையில் உள்ள ஒரு பகுதி மக்களின் எண்ணமாக இருந்தது. அதாவது யூத மத விழுமியங்களை செய்யாதவர்கள் கிறிஸ்து மீது விசுவாசம் வைத்து இரட்சிக்கப்பட முடியாது என்பது அவர்களின் வாதம்.

ஒரு புறஜாதியான் யூத மதத்தை தழுவுவதற்கு முக்கியமாக செய்ய வேண்டிய சடங்கு விருத்தசேதனம் செய்தலாகும். இதைச் செய்யும் புறஜாதியானே கிறிஸ்தவ விசுவாசத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென மனந்திரும்பிய யூதர்கள் எதிர்பார்த்தனர்.

இந்த பிரச்சினையைத் தீர்க்கும்படியாக பவுல் தன் விளக்கத்தை எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனிதன் நீதிமானாக்கப்பட முடியுமே தவிர மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே அல்ல என்று தெளிவாக விபரிக்கின்றார்.

இயேசு கிறிஸ்து தம்முடைய நீதியாலும் தம்மைத்தாமே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து தம்மில் விசுவாசம் வைக்கும் அனைவரையும் நீதிமான்களாக மாற்றும் கிருபையின் செயலை பூரணமாய் நிறைவேற்றி நியாயப்பிரமாணமல்ல கிறிஸ்துவின் கிருபையின் நிமித்தம் ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுதலே உண்மை என விபரிக்கின்றார்.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்

சோதனைகள் எமது
குணாதிசயத்தை
மெருகூட்டும்

பயம் பாவத்தின்
சிறப்பான
உற்பத்தியாகும்

தேவனுக்குரிய எமது
உண்மைத்துவமும்
விசுவாச வாழ்வின்
உறுதியும் சோதனை
நேரத்திலே
நிரூபிக்கப்படும்

இயேசு பசியுடன்
ஊழியத்தை
ஆரம்பித்தார்
(வனாந்தரத்தில்);
தாகத்துடன்
ஊழியத்தை நிறைவு
செய்தார்
(சிலுவையில்)

தேவனுடைய சித்தம்
செய்வதால் பிரச்சினை
வருவது வேறு;
தேவனுடைய சித்தம்
செய்யாமல்
பிரச்சினையை
உருவாக்குவது வேறு.
எனவே தேவனுடைய
சித்தம் செய்வதால்
வரும் பிரச்சினையை
ஏற்றுக்கொள்ளுங்கள்.
அத்துடன் தேவ சித்தம்
செய்யாத பழக்கத்தை
விட்டுவிடுங்கள்

நம்முடைய ஆவிக்குரிய
பிறப்பு இயேசு
கிறிஸ்துவின் ஆழ்ந்த
தாழ்மையைப்
பிரதிபலிப்பதாக இருக்க
வேண்டும்

— *Ps. VM* —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர்கள் கெட்ட பிள்ளைகள்

**வேதப்பகுதி: பிலிப்பியர் 2:13-21**

ப்ரீத்தி கர்த்தருக்கு பயந்து நல்ல பிள்ளையாக வாழ்வதற்கு முடிவு செய்தாள். ஆனால் அவளுக்கு இப்பொழுது பள்ளிக்கூடமே பிடிக்க வில்லை. ஏனென்றால் அங்கே எல்லா பிள்ளைகளும் கெட்ட பிள்ளைகளாக இருக்கிறார்கள் என்றாள். அவர்கள் எதற்கெடுத்தாலும் பொய் சொல்கிறார்கள், சினிமா கதை சொல்கிறார்கள், மோசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள் என்று வருத்தத்துடன் சொல்கிறாள்.

ப்ரீத்தி சொல்வது சரிதான். ஆனால் கெட்ட பிள்ளைகளை அவள் வெறுக்கக்கூடாது. அவர்களுக்கு முன்பாக இவள் நல்ல பிள்ளையாக வாழ்ந்து காட்ட வேண்டும். இருள் இருக்கிற இடத்தில் வெளிச்சம் தேவை. பல மோசமான பிள்ளைகள் நடுவில் வெளிச்சம் போல இருக்க ப்ரீத்தி போன்றவர்கள் தேவை. பாவிகள் நிறைந்த பூமியில் பரிசுத்தராகிய இயேசு வந்து வாழ்ந்தாரே. அது போல அவர்கள் நடுவில் ப்ரீத்தியும் வாழ வேண்டும்.

**சிந்தனைக்கு:-**

**கர்த்தர் விரும்பியபடி நல்ல சுபாவங்களோடு வாழ்வது கடினம். ஆனால் பரிசுத்த ஆவி நம்மிடம் வரும்போது அவைகள் எளிதாகிவிடும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – அக்டோபர் 27

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும்,
நீர் என்றைக்கும் தங்கத்தக்க
நிலையான ஸ்தானமுமாகிய
ஆலயத்தை உமக்குக் கட்டினேன்
1இராஜாக்கள் 8:13

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org